**செய்தி வெளியீடு எண்: 387** **நாள் : 27.07.2016**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்த பல திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மான்யங்களுடன் கூடிய கடனுதவி, ஈடு உத்திரவாத நிதியம் மற்றும் முயற்சி மூலதன நிதியம் போன்ற திட்டங்கள் அரசின் கொள்கையளவில் வடிவுபெற்றுள்ளன. இதன் ஒரு பகுதியாக சிறந்த தொழில்முனைவோர்களை கண்டறிய சென்னையிலுள்ள தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனமும் தொழில் மற்றும் வணிகத்துறையின் ' மண்டல இணை இயக்குனர் அலுவலகமும் இணைந்து செவாலியே டி.தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி தூய மேரி சாலை மேரிலாண்ட் செம்பியம், சென்னை என்ற முகவரியில் **29.07.2016** ஆம் நாள் ஒரு நாள் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம் நடத்த இருக்கிறது. சுயமாக தொழில் தொடங்க விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பிரிவினர், தொழில் துறையில் அனுபவமிக்க மற்றும் ஏதேனும் தொழிலில் அடிப்படை பயிற்சி பெற்ற ஆண் / பெண் அனைவரும் இந்த முகாமில் கலந்துகொள்ளலாம்.

முதல கட்டமாக சொந்தமாக தொழில் தொடங்குவதில் உள்ள நன்மைகள், தொழில் வாய்ப்புகள், தொழிலை தெரிவுசெய்வது எப்படி ? தொழில் துவங்கவிருக்கும் முனைவோருக்கு அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் மற்றம் திட்டங்கள் ஆகியன பற்றி இம்முகாமில் விவரிக்கப்படும். பயிற்சிமுகாமின் இறுதியில் தொழில் தொடங்க விரும்பும் நபர்களின் பெயர்கள் பெறப்பட்டு அவர்கள் இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அழைக்கப்படுவர். இரண்டாம் கட்ட 7–நாள் பயிற்சியில் இந்த தொழில்முனைவோர்களுக்கு தொழில் வணிக வடிவம் மற்றம் திட்ட அறிக்கை தயாரித்தல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு

அவர்களுக்கு நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழக்கப்படும். தகுதி உள்ளவர்கள் அரசு வழங்கும் மான்ய திட்டங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதன்மூலம் நிதி உதவிகள் பெற ஆலோசனைகள் வழங்கப்டும். இப்பயிற்சிகளில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் மாவட்ட தொழில் மையயங்களும் இணைந்து செயல்படும். எனவே, அரசு திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் அதன் மூலம் பயன்படும் வழிவகைகளும் ஏற்படுத்தி தரப்படும் என்பதையும் தெரிவித்த கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு Dr.பி.மலர்விழி அவர்களை 9840456392 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தை 044–2250 1621 எண்களிலும் அணுகலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**